Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.352/2020

**Depositions of PW-3**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.தமிழரசன் | Occupation | கொரியர் கம்பெனி ஊழியர் |
| Father's name | செல்வம் | Calling | |
| Village | திருவில்லிபுத்தூர் | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12th day of February 2026.

12.02.2026

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது திருவில்லிபுத்தூரில் குடியிருந்து வருகிறேன். நான் கொரியர் கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ஆவணங்களிலுள்ள முதலாவது கையெழுத்துக்கள் என்னுடையது தான். எனது அக்கா நகை திருடுபோனதற்காக காவல்நிலையம் சென்றபோது போலீசார் கேட்டுக்கொண்டதால் நான் கையெழுத்து செய்து கொடுத்தேன். இவ்வழக்கு சம்மந்தமாக எனக்கு வேறு எதுவும் தெரியாது. **ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள முதலாவது கையெழுத்து அசாஆ.4 ஆகவும், அத்தாட்சியிலுள்ள முதலாவது கையெழுத்து அசாஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்கக்கோரி அரசு தரப்பில் அனுமதி கேட்டதன் பேரில் அனுமதிக்கப்பட்டு சாட்சி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.**

## <u>அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

நான் போலீசார் விசாரணையின்போது 26.11.2019 ம் தேதி காலை 10.00 மணியளவில் திருவில்லிபுத்தூர் டு சிவகாசி ரோட்டிலுள்ள சர்ச் முன்பாக நானும் ஆஞ்சே என்பவரும் நின்று பேசிக்கொண்டிருந்தபோது போலீசார் சந்தேகத்தின் அடிப்படையில் அங்கும் இங்கும் சென்று கொண்டிருந்த ஆஜர் எதிரியை பிடித்து விசாரித்தபோது அவர் முன்னுக்குப் பின் முரணாக சொன்னார் என்றும் எதிரியை எங்கள் முன்பாக கைது செய்து அவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை போலீசார் பதிவு செய்தார்கள் என்றும் எதிரி திருடிய பொருட்களை மகாலட்சுமி என்பவரிடம் கொடுத்த அடகு வைத்திருப்பதாகவும் எதிரியை அழைத்து சென்றால் அடையாளம் காட்டுவதாக சொன்னதன் பேரில் போலீசாருடன் நானும் தமிழரசனும் மற்றும் ஆஜர் எதிரி ஆகீயோர்கள் சென்றபோது மகாலட்சுமியை அடையாளம் காட்டினார் என்றும் அவர் எடுத்து ஆஜர் செய்த 3 1/4 பவுன் எடையுள்ள டாலருடன் கூடிய பேன்சி மாடல் தங்க செயின் அறுந்த நிலையில் இருந்ததை அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றினார்கள் என்று கூறிவிட்டு தற்போது எதிரி கேட்டுக்கொண்டதால் அவருக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

## <u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

இல்லை.

| |
|---|
| சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.<br><br>நீதித்துறை நடுவர் எண்.2,<br>திருவில்லிப்புத்தூர். |

Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.352/2020

**Depositions of PW- 4**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.கோவிந்தன் | Occupation | தலைமை காவலர் |
| Father's name | சிதம்பரம் | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12th day of February 2026.

12.02.2026

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது திருவில்லிபுத்தூர் நகர் காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்னர் கடந்த 2019 ம் வருடம் திருவில்லிபுத்தூர் நகர் காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்தபோது கடந்த 03.03.2019 அன்று காலை 10.15 மணிக்கு திருவில்லிபுத்தூர் சந்தைபேட்டை தெருவை சேர்ந்த அந்தோணிசெல்வி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.137/2019 பிரிவுகள். 379 இதச வின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அசாஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. சார்பு ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

சம்பவமானது 02.03.2019 அன்று நடைபெற்றது என்றால் சரிதான். ஆனால் காவல்நிலையத்தில் 03.03.2019 அன்று தான் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். சம்பவம் நடைபெற்றதாக கூறப்படும் இந்திரா நகர் சர்ச்சிலிருந்து எங்கள் காவல்நிலையத்திற்கு சுமார் 2 1/2 கிலோமீட்டர் தொலைவு இருக்கும். சம்பவம் நடந்து 48 மணி நேரம் கழித்து புகார் கொடுத்ததற்கான காலதாமதம் பற்றிய காரணம் புகார் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் அக்கம்பக்கத்தில் தேடி பார்த்துவிட்டு புகார்

கொடுக்க தாமதமானதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாக கூறப்படும் நாளான 03.03.2019 அன்று நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டதா என்றால் 03.03.2019 அன்று நீதிமன்றத்திற்கு முதல் தகவல் அறிக்கை அனுப்பப்பட்டது. மேற்படி முதல் தகவல் அறிக்கையானது 04.03.2019 அன்று தான் நீதிமன்றத்திற்கு வந்துள்ளது என்றாலும் பொய்யான புகார் மனுவை பெற்று எதிரி மீது பொய்யாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.